**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 356 **நாள்**: 03.10.2026

**சென்னை, தரமணி, ஐ.ஐ.டி.எம். ரிசர்ச் பார்க்கில் மனச்சிதைவு ஆராய்ச்சி நிறுவனம் (SCARF), இளைஞர் மனநலத் துறை நடத்தும் 'நம்பிக்கை சுவர்' (Wall of Hope) – கனவுகள், நம்பிக்கைகள் & மீள்திறன் நிகழ்ச்சியை சென்னை உயர் நீதிமன்றம் நீதியரசர் என்.ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள், இன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்றுப் பார்வையிட்டார்.**

இன்று (03.10.2026) சென்னை, தரமணி, ஐ.ஐ.டி.எம். ரிசர்ச் பார்க்கில் மனச்சிதைவு ஆராய்ச்சி நிறுவனம் (SCARF), இளைஞர் மனநலத் துறை நடத்தும் 'நம்பிக்கை சுவர்' (Wall of Hope) – கனவுகள், நம்பிக்கைகள் & மீள்திறன் நிகழ்ச்சியை சென்னை உயர் நீதிமன்றம் நீதியரசர் என்.ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று தற்கொலை தடுப்பு மற்றும் மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 20,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களின் குரல்களை 'மாபெரும் நம்பிக்கை சுவராக' (Great Wall of Hope) காட்சிப்பட்டுள்ளதை பார்வையிட்டார். மேலும், இங்கு அமைக்கப்பட்ட விழிப்புணர்வு கண்காட்சி அரங்கத்தினைப் பார்வையிட்டு, அங்கு பங்கேற்ற இளைஞர்களுடன் கலந்துரையாடினார்.

"நம்பிக்கையின் சுவர்" என்பது மனச்சிதைவு ஆராய்ச்சி நிறுவனத்தின் இளைஞர் மனநலத் துறையின் ஒரு முயற்சி. இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கை நோக்கம் என்ன, எதில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், தொடர்ந்து முன்னேற அவர்களுக்கு எது உதவுகிறது போன்ற கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு இடமாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே அதிக தற்கொலைகள் பதிவாகும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தப் பிரச்சினையால் இளைஞர்களும் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இளைஞர்கள் எதிர்கொள்ளும் மனநலச் சவால்கள் அதிகரித்து வரும் நிலையில், தற்கொலை என்பது இந்தியாவில் முக்கியமான பொது சுகாதாரப் பிரச்சினையாக தொடர்ந்து உள்ளது. எனவே, இளைஞர்கள் தங்கள் எண்ணங்களை

வெளிப்படுத்தவும், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும், மன உறுதியை வளர்த்துக் கொள்ளவும், தேவைப்படும் போது உதவி கேட்கவும் பாதுகாப்பான இடங்களை உருவாக்குவது மிகவும் முக்கியம். இளம் வயதினர் மற்றும் இளைஞர்களிடம் அவர்களின் வாழ்க்கை நோக்கம் என்ன என்பதை 3×3 அங்குல அளவுள்ள வண்ணமயமான Post-it Notes-ல் எழுதுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஒரு சிறிய யோசனையாகத் தொடங்கிய இந்த முயற்சி, இன்று நாடு முழுவதும் ஒரு பெரிய இயக்கமாக வளர்ந்துள்ளது. இந்த முயற்சியின் மூலம் இந்தியா முழுவதும் உள்ள இளைஞர்களிடமிருந்து 20,000-க்கும் மேற்பட்ட பதில்கள் பெறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிலும் ஒரு எண்ணம், கனவு, வாழ்க்கை நோக்கம் அல்லது தொடர்ந்து வாழ்க்கையில் முன்னேறுவதற்கான ஒரு காரணத்தை பிரதிபலிக்கிறது.

இந்த 20,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களின் குரல்கள் ஒன்றாக இணைந்து ஒரு சக்திவாய்ந்த "Wall of Hope"-நம்பிக்கையின் சுவராக உருவாகியுள்ளது. 2026ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் தேதி, 20,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களின் பதில்களைக் கொண்ட Wall of Hope, சென்னை, ஐ.ஐ.டி, மெட்ராஸ் ஆராய்ச்சி வளாகம், தரமணியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், (SNEHA - Society for Nutrition, Education and Health Action) நிறுவனர் டாக்டர் லட்சுமி விஜயகுமார், துணைத் தலைவர் டாக்டர் ஆர்.தாரா, இயக்குநர் (SCARF) டாக்டர் ஸ்ரீதர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**